சூழ்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று கண்டிப்பாக அது பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

(ஐ) வீடுகளில் ஏற்படுகின்ற இறப்புகளுக்கு இறப்புச் சான்றிதழ் பெறுவதில் உள்ள சிரமங்களைக் களைதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்* **V.P.B.** *பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறப்புச் சான்றிதழ் என்பது கிராமப்புறங்களில் இருக்கின்ற பொதுமக்களுக்கு வருவாய்த் துறை சார்ந்த முக்கியமான தேவையாக இருக்கிறது. மருத்துவமனையிலே இறப்பு ஏற்பட்டால், மருத்துவ அலுவலரால்* Form 4A *கொடுக்கப்பட்டு, அதிலிருக்கும்* cause of death–*ஐ வைத்து கிராம நிருவாக அலுவலர், உடனடியாக அந்த* certificate *கொடுத்துவிடுகிறார். ஆனால், மருத்துவமனை அல்லாது, வீடுகளில் ஏற்படுகின்ற இறப்புகளுக்கு பொதுமக்கள் கிராம நிருவாக அலுவலரிடம் சென்று இறப்புச் சான்றிதழ் கேட்கின்றபொழுது, அவர் மீண்டும் அந்தச் மருத்துவரிடமிருந்து* Form 4A *வந்தால்தான் அந்தச் சான்றிதழைக் கொடுக்க இயலும் என்று சொல்வதால், பொதுமக்கள் மருத்துவரிடம் சென்று அலைகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, வீடுகளில் ஏற்படுகிற இறப்புகளைப் பொறுத்தவரையில், கிராம நிருவாக அலுவலர்களே நேரடியாகச் சென்று பார்வையிட்டு* cause of death–*ஐ விசாரித்து, அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினால், பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்கள் குறையும். இது குறித்து பேரவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வணக்கம்.*

(ஒ) ஒரத்தநாடு தொகுதி, இனாத்துக்கான்பட்டி விமானதளம், குடியிருப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒரத்தநாடு தொகுதியில் இந்திய துணைக் கண்டத்தின் பெரிய விமான தளம் அமைந்திருக்கிறது.*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[திரு. எம். இராமச்சந்திரன்] [2019 ஜூலை 20

அதில் இனாத்துக்கான்பட்டி என்ற கிராமம், அந்த விமான படைதளத்திற்குள்ளேயே இருக்கின்ற காரணத்தால், விமான ஓடுபாதையை நீட்டிப்பதற்கு தகுதியற்றதாக இருக்கிறது. அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று அரசே விரும்புகிறது. எங்களுடைய ஆட்சி காலத்திலும் அதை விரும்பினோம். அதற்கான இடத்தைத் தேர்வு செய்து கொடுக்கிறபோது, அந்த இடத்தில் இருக்கிற சில பேர் அதைக் கொடுக்காமல் உயர் நீதிமன்றத்தில் தடை பெற்றுவிட்டார்கள். அங்கேயிருக்கிற 146 குடியிருப்புதாரர்களுக்கும் இந்த அரசாங்கம் உடனே பரிசீலனை செய்து, மாற்று இடம் வழங்குமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(ஓ) திருவண்ணாமலை மாவட்டம், குப்பநத்தம் அணை, மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், ஜவ்வாதுமலை அடிவாரத்திலே குப்பநத்தம் அணை கட்டப்பட்டது. அந்த அணை கட்டுகிறபொழுது அங்கேயிருந்த மலைவாழ் மக்கள் 150 பேரை அந்த இடத்திலிருந்து மாற்றி பொதுப் பணித் துறையின் மூலமாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வீடு கட்டப்பட்டிருக்கிறதேயொழிய, 10 ஆண்டு காலமாக அவர்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை. தங்களை காலி செய்யச் சொல்லிவிடுவார்களோ என்ற அச்சம் அங்கே நிலவுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்குப் பட்டா வழங்கும்படி தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(ஐ) வீடுகளில் ஏற்படுகின்ற இறப்புகளுக்கு இறப்புச் சான்றிதழ் பெறுவதில் உள்ள சிரமங்களைக் களைதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு*

2019 ஜூலை 20]

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரமசிவம் அவர்கள், பிறப்பு இறப்புச் சான்றிதழ் பற்றி ஒரு கோரிக்கையை வைத்திருந்தார்கள். தமிழகத்தில் கிராமங்களைப் பொறுத்தவரையில் கிராம நிருவாக அலுவலர்களே பிறப்பு இறப்பு பதிவு அலுவலர்கள் ஆவார்கள். ஒருவர், வயது முதிர்வு காரணமாக இயற்கை மரணம் அடைந்தாரெனில், இறந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் அளிக்கும் தகவலின் அடிப்படையில் கிராம நிருவாக அலுவலரால் இறப்பு பதிவு செய்யப்படுகிறது. இயற்கை மரணமல்லாமல் உடல் நலக் குறைவு, நோய் காரணமாக சிகிச்சை பெற்று, சிகிச்சை பலனளிக்காமல் இறக்க நேரிடின், பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டம், 1969 மற்றும் விதிகள், 2000—ன்படி, குடியிருப்புகளில் நிகழும் இறப்புகளுக்கு, இறந்தவர் கடைசியாக சிகிச்சை பெற்ற மருத்துவத் தொழிலாற்றுநரிடமிருந்து படிவம் 4 (அ)—ல் இறப்பிற்கான காரணம் குறித்து மருத்துவச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். மேற்கண்ட விதிகளின்படி கிராமங்களில் பிறப்பு இறப்புப் பதிவுகள் எவ்வித தாமதமுமில்லாமல் கிராம நிருவாக அலுவலர்களாலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பரமசிவம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒ) ஒரத்தநாடு தொகுதி, இனாத்துக்கான்பட்டி விமானதளம், குடியிருப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்குதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் இராமச்சந்திரன் அவர்கள், இனாத்துக்கான்பட்டி மக்களுடைய கோரிக்கையை இங்கே சொன்னார்கள். இனாத்துக்கான்பட்டி மக்களுடைய மீள்குடியமர்வுக்காக மாற்று இடமாக நாஞ்சிக்கோட்டை கிராமத்தில் புல எண்கள் 326/2, 401/5 மற்றும் 407 ஆகிய 3 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அம்மக்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இனாத்துக்கான்பட்டி கிராம மக்கள், இனாத்துக்கான்பட்டி புல எண்கள் 4 மற்றும் 5—ல் மட்டுமே குடியமர்வு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தி, வேறு இடங்களுக்குச் செல்ல தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.*

இந்த நிலையில், நீதிப் பேராணை மனுக்கள்மீது தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் குடியமர்வு

விரைந்து செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இனாத்துக்கான்பட்டி கிராம மக்களுடைய மீள்குடியமர்வுக்காக மாற்று இடமும் கண்டறியப்பட்டு தயார் நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஓ) திருவண்ணாமலை மாவட்டம், குப்பநத்தம் அணை, மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள், அணை கட்டுவதற்காக ஆக்கிரமிப்பு செய்திருக்கிற நிலங்களுக்குப் பதிலாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதனுடைய வகைப்பாடு என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து, தகுதியானவர்களுக்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. அவர்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை. வகைப்பாடு சட்டத்திற்குட்பட்டு அது இருக்குமேயானால், அவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10—55

(ஔ) கிள்ளியூர் தொகுதி, நீரோடி கிராமம், காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17 ஆம் தேதியன்று கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீரோடி துறையிலிருந்து, ஸ்டான்லி, நிகோலஸ், ராஜூ, சகாயராஜ் மற்றும் ஜான் பாஸ்கோ ஆகிய 5 பேர் கொல்லம் நீண்டகரை துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச்*